

அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் பல்வேறு கட்சியினர் தங்களை தாய்க்கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். புதிதாக இணைந்த கழக உடன்பிறப்புகளுக்கு கழக இருவண்ண ஆடை அணிவித்து வரவேற்றார். உடன் அன்பு.விஜய பார்த்திபன், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன்,ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, ரெ.அசோகசக்ரவர்த்தி, தெய்வ.இளையராஜா, நகர செயலாளர் வெ.கொ. கருணாநிதி,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் பறைசாற்ற நடைபெறும் 'தமிழ்நாடு_தலைகுனியாது', பரப்புரை பொதுக்கூட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி பாலவிடுதியில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில், க. சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ வரவேற்க, கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், சிறப்புரையாற்றினார். எம்.எல்.ஏ ஆர்.இளங்கோ, நிர்வாகிகள் நந்தகுமார், கரூர் முரளி, டி. ராஜேந்திரன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரிசுப்பிரமணி, காலனி செந்தில், சாலைசுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் எஸ். சுதாகர், எம்.ரகுநாதன், எம். ராமலிங்கம், கே.ரவி ராஜா, கே. பாஸ்கரன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொள்ள மிகச்சிறப்பாக நடைபெற்றது.

### மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில்

# ஊத்தங்கரையில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! டி.செங்குட்டுவன் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி,பிப்.3–

கழகத் தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரையில் தமிழ்நாடு தலை குனியாது என்ற தலைப்பில் பிரம்மாண்ட பரப்புரை பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் நடைபெற்றது.



கூட்டத்துக்கு ஊத்தங்கரை தெற்கு ஒன்றிய செயலாளர் ரஜினி செல்வம் வரவேற்புரை ஆற்றினார்

கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர்கள் எக்கூர்.செல்வம் , குமரேசன், நரசிம்மன், செந்தில், குண. வசந்தரசு, சாந்தமூர்த்தி, இளையராஜா, ராஜேந்திரன், அறிஞர் , காந்தி, மகேந்திரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன் , தனசேகரன், நாராயணன் ,மகேந்திரன் கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் ,வேல்மணி பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை , பேரூராட்சித் தலைவர் அமானுல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பேசும்போது

கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வந்த பிறகு நிறைவேற்றியிருக்கிற காரியங்களை எல்லாம் முன்பு பேசிய மாவட்ட கழக செயலாளர் மதியழகன் எம் எல் ஏ பட்டியலிட்டுப் போட்டுக் காட்டினார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆட்சி ஐந்து ஆண்டு காலம் நடைபெற்றிருந்தாலும், முழுமையாக நடைபெற்றது ஒரு மூன்று ஆண்டு காலம்தான். காரணம், தேர்தல் 2021லே முடிந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் தமிழ்நாட்டிலே கொரோனா.

அன்றைக்கு எதிர்கட்சியிலே இருந்த எம்முடைய தலைவர் தளபதி அவர்கள், 'நிவாரணமாக 5000 ரூபாய் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தர வேண்டும்' என்று கேட்டார். அப்போது எடப்பாடி என்ன சொன்னார்? 'கொடுக்க முடியாது' என்று சொல்லி 1000 ரூபாய்தான் அறிவித்தார். உடனே நம்முடைய தலைவர் சொன்னார், 'நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், எடப்பாடி கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை, திமுக ஆட்சிக்கு வந்தவுடன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எஞ்சியிருக்கிற 4000 ரூபாயைத் தருவோம்' என்று சொன்னார்.

ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக, இரண்டு தவணையாக 2000, 2000 என்று கொடுத்தாரா இல்லையா? ஏறத்தாழ 404 வாக்குறுதிகளை நிறைவேற்றித் தந்திருக்கிறார். இன்றைய தினம் தாய்மார்களே, ஒவ்வொருத்தரும் 29,000 ரூபாய் வாங்கி இருக்கிறீர்கள். ஆயிரம் ரூபாய் மாதம் என்று 29 மாதம், இந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாக தளபதி மு.க. ஸ்டாலின் ஒரு கோடியே 30 லட்சம் பெண்களுக்கு, ஒவ்வொரு பெண்ணுக்கும் 29,000 ரூபாய் கொடுத்திருக்கிறார்.

தி.மு.க. ஆட்சியை ஊழலுக்காகக் கலைக்கப்பட்ட ஆட்சி என்று எடப்பாடி சொல்லுகிறார். நான் அந்த அடிமுட்டாள் எடப்பாடிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், திமுக ஆட்சியை எந்தக் காலத்திலும் ஊழலுக்காக எவனும் கலைக்கவில்லை. ஊழல் செய்து இந்தியாவிலேயே முதலமைச்சராக இருக்கிறபோதே தண்டனை பெற்ற ஒரு கட்சி உண்டு என்றால் அது அதிமுகவும் அதன் தலைவர் ஜெயலலிதாவும் தான்.

1976லே திமுக ஆட்சி கலைக்கப்பட்டதற்குக் காரணம் ஊழலுக்காக அல்ல. அன்றைக்கு இருந்த பிரதமர் இந்திரா காந்திக்குக் கோபம் ஏற்பட்டது. இந்தியா பூராவிலும் எமர்ஜென்சி கொண்டு வந்த நேரத்தில், எல்லாத் தலைவர்களையும் கைது செய்தார்கள். தமிழ்நாட்டில் காமராஜரையும் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவு வருகிறது. எடப்பாடி போன்றவர்கள் இருந்திருந்தால் காமராஜரைக் கைது செய்துவிட்டு ஆட்சியை நீடித்திருப்பார்கள். ஆனால் கலைஞர், அந்த உத்தரவு வந்தவுடன் காமராஜர் வீட்டுக்கு நேராகச் சென்று, 'நான் ராஜினாமா செய்யப் போகிறேன்' என்று சொன்னார். காமராஜர் சொன்னார், 'நீ முதலமைச்சராக இருக்கிற காரணத்தினால்தான் நான் வெளியே இருக்கிறேன், நீ ராஜினாமா செய்துவிட்டால் அடுத்த நிமிடமே என்னை ஜெயிலுக்கு அனுப்பி விடுவார்கள், ஆகவே ராஜினாமா செய்யாதே' என்று கலைஞரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு வேண்டிக் கேட்டுக் கொண்டார். எடப்பாடி

தொடர்ந்து இப்படிப் பேசுவீர்களேயானால், உங்களுடைய ஆட்சியில் என்னென்ன செய்தீர்கள் என்பதைத் தேர்தல் நேரத்திலே வீதி வீதியாகச் சொல்லுவோம். 2026ல் மாபெரும் வெற்றியைத் தேடித் தர வேண்டும் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி அவர்கள்

”இன்று காலையிலிருந்து ஊத்தங்கரை தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றோம். முதலில் கழகத் தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சுமார் 50 முதல் 60 ஆண்டுகளாக கழகத்திற்காக உழைத்த தற்போது வயது முதிர்வு மற்றும் உடல்நலக் குறைவால் வீட்டில் இருக்கும் 5 முன்னோடிகளின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களைக் கௌரவித்தோம். எங்களை பார்த்ததும் அவர்கள் பெரும் உற்சாகமடைந்தனர். 'நாங்கள் தான் மீண்டும் வெற்றி பெறுவோம்' என அவர்கள் அளித்த நம்பிக்கை எங்களுக்குப் பெரும் தெம்பைத் தந்தது. பலதரப்பட்ட வணிகர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சார்ந்த சுமார் 250க்கும் மேற்பட்டோருடன் கலந்துரையாடினோம். கடந்த 4 ஆண்டு கால திமுக ஆட்சியின் சாதனைகளை அவர்களே பட்டியலிட்டனர். சில கோரிக்கைகளையும் முன் வைத்தனர். தேர்தல் வெற்றிக்குப் பிறகு மீண்டும் இதே போன்ற ஒரு கூட்டத்தைக் கூட்டி, அவர்களின் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் இணைந்து விவாதிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளோம்.

மத்திய பட்ஜெட் குறித்து கேள்வி எழுப்பியபோது, ”மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பட்ஜெட் தமிழகத்திற்கு இழைக்கப்பட்ட துரோகம். தமிழகம் என்ற ஒரு மாநிலம் இருப்பதே அவர்களுக்குத் தெரியவில்லை என்று தோன்றுகிறது. அதனால்தான் 'தமிழகம் தலைநிமிரட்டும்' என்ற முழக்கத்துடன் நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம் என்றார்.

”தேர்தல் நேரத்தில் அறிவிப்புகளை அடுக்குவது அதிமுகவின் வழக்கம். ஆனால் திமுக சொன்னதைச் செய்யும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. ஊத்தங்கரையில் மக்கள் காட்டும் இதே எழுச்சி கன்னியாகுமரி முதல் சென்னை வரை அனைத்துத் தொகுதிகளிலும் உள்ளது. எனவே முதல்வர் கூறியது போல 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதி என்று அவர் கூறினார்.

இந்த மாபெரும் பரப்புரை கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ரமேஷ், தேவகுமாரன் மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மாலதி நாராயணசாமி , மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி பொருளாளர் கதிரவன் , பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் கோதண்டன் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ,தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் , மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் BLA2 ,BLC,BDA ஒருங்கிணைப்பாளர்கள் கிளைக் கழக நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கான பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டனர்

முடிவில் ஊத்தங்கரை பேரூர் கழகப் பொறுப்பாளர் பார்த்திபன் நன்றி உரையாற்றினார்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் தினகரன் நாளிதழ் மூத்த பத்திரிகையாளர் ஏ.எம். சேகர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்தை நக்கீரன் பத்திரிக்கை ஆசிரியர் கோபால் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வில் தி.மு.க. நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன், வேல்முருகன், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், குடும்பத்தினர், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கும்பகோணம் நகர மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 419 மாணவ ,மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டியை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் டி.கணேசன், ஜெ.சுதாகர், துணை செயலாளர் ப்ரியம் சசிந்தரன், மாமன்ற உறுப்பினர் வர்ஷா அழகேசன்,உதவி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள்,பகுதி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா பட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி , நாட்டாமங்கலம் , கூட்டாத்துப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் கழக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் வீடு வீடாகச் சென்று கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ் .ஆர். சிவலிங்கம் எம்.பி, தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். அப்போது ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார், பேரூர் செயலாளர் பாபு மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் கலைஞர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ. ஆர். ராஜா ஏற்பாட்டில் பருத்திக்குடி ஊராட்சி அ.தி.மு.க. கிளை செயலாளர் சேகர் தலைமையில் 11 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா, எம்.அப்துல் மாலிக், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ். கே.முத்துராஜா மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. காஜாமொய்தீன்

**பிப்ரவரி 3 (2018)**



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் திருவல்லிக்கேணி பகுதி பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்து, மாநில சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பாராட்டுகளைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**